# கி.பி. 400 லிருந்து 1600 வரை கிறிஸ்தவத்தின் பரவல்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் H4b2 பாடத்தை வாசிக்கவும்.

1. **பண்டைய கிறிஸ்தவத்தின் வரலாற்றை உங்கள் சபைக்கு போதிக்க ஜெபத்தாலும் வார்த்தையாலும் உங்களை ஆயத்தப்படுத்துக.**

**ஜெபம்:** "கர்த்தராகிய இயேசுவே, நீர் எவ்விதம் மக்களையும் தேசங்களையும் ஆசீர்வதிக்கிறீர் என்பதை வரலாற்றில் இருந்து கற்றுக் கொள்ள எங்களுக்கு உதவும்."

கிறிஸ்தவம் விக்கிரக ஆராதனையை எதிர்கொண்ட போது என்ன நடந்தது என்பதை **அப்.19:11-28** ல் காண்க.

- இயேசுவை கனப்படுத்த தேவன் என்ன செய்கிறார்? (11 & 12)
- பிசாசுகளைத் துரத்த அவிசுவாசிகள் இயேசுவின் நாமத்தை உபயோகப்படுத்த முயற்சி செய்தபோது என்ன நடந்தது? (13-17)
- மந்திரவாதிகளாய் இருந்து பின் விசுவாசியானவர்கள் செய்ய வேண்டியது என்ன? (18-20)
- அவிசுவாசிகளான பூசாரிகளும், மதத்தினரும் என்ன செய்ய முயலுவார்கள்? (21-28)

### கிறிஸ்தவம் கி.பி. 400 முதல் 800 வரை

ஆரியர்கள் மேற்கு நோக்கி நகர்ந்தபோது, புறஜாதி மக்கள் ரோம சாம்ராஜ்யத்தை மேற்கொண்டு, அதை பலவீனப்படுத்தினர். இது கிறிஸ்தவத்தின் மேல் பல விளைவுகளை ஏற்படுத்தியது:

- புறஜாதியார் பலர் நற்செய்தி அறிந்து கொண்டு விசுவாசிகள் ஆயினர்.
- சபைகள் அல்ல, மடங்களே விசுவாசத்திற்கும் கல்விக்கும் மையங்கள் ஆயின.
- அயர்லாந்தில் செல்டியர்கள் (Celts) மடங்களை ஸ்தாபித்து ஐரோப்பா எங்கும் சுவிசேஷத்தை அறிவித்தனர்.
- செல்டியர்கள் கல்வி போதித்து, வேதாகமத்தையும் பிற புத்தகங்களையும் மொழி பெயர்த்தனர்.
- தெற்கு ஆசியாவில் கிறிஸ்தவ சமுதாயங்கள் எழுந்தன.
- மத்திய ஆசியாவில் நெஸ்டோரிய கிறிஸ்தவர்கள் மடம் சார்ந்த பள்ளிகளை ஸ்தாபித்தனர்.
- கி.பி. 845 வரை நெஸ்டோரிய கிறிஸ்தவம் சீனாவில் செழித்தோங்கியது.
- 8 ஆம் நூற்றாண்டில் ரோம பேரரசர் சார்லமாக்னே கிறிஸ்தவத்தையும் நீதியையும் வளர்த்தார்.

**மத்.24:6-14ல் காண்க:** தம்மைப் பின்பற்றுகிறவர்கள் உலகத்தில் எதிர்கொள்ள வேண்டியவைகள் என்ன என்று இயேசு கூறினார்?

- ஜனங்களுக்கு இடையில் என்ன நடக்கும்? (6 & 7)
- இயேசுவைப் பின்பற்றுகிறவர்களுக்கு ஜனங்களுக்கு இடையில் என்ன நேரும்? (9)
- கிறிஸ்தவத்தைப் பற்றி கேள்விப் பட்ட அநேகம் மக்கள் என்ன செய்வார்கள்? (10)
- அநேகம் ஜனங்களை மறுதலிக்கச் செய்வதற்கு எது காரணமாய் இருக்கும்? (11 & 12)
- இந்தக் காலங்களில் இயேசுவின் உண்மையான சீஷர்கள் என்ன செய்ய வேண்டும்? (13)
- சுவிசேஷத்திற்கு என்ன நேரிடும்? (14)

## கிறிஸ்தவம் கி.பி.800 முதல் 1200 வரை.

வட பகுதி வைக்கிங்குகள் ஐரோப்பாவில் உள்ள வளமான பகுதிகளைப் படையெடுத்துப் பிடித்து மடங்களை அழித்தனர். இஸ்லாமியர் ஆசியாவையும் ஐரோப்பாவையும் பிடித்தனர். இது கிறிஸ்தவத்தின் மேல் பல விளைவுகளை ஏற்படுத்தியது.

- வைக்கிங்குகள் பல கிறிஸ்தவர்களை கைதிகளாக்கினர். அவர்களிடம் இருந்து சுவிசேஷத்தையும் கற்றறிந்தனர்.
- கிறிஸ்தவம் மீண்டும் ஐரோப்பாவில் பரவத் தொடங்கியது.
- பெயரளவிலாவது பல இராஜாக்களும் மக்கள் சமுதாயங்களும் கிறிஸ்தவர்கள் ஆயினர்.
- ஐரோப்பாவை விடவும் ஆசியாவில் கிறிஸ்தவம் வேகமாகப் பரவியது.
- முதலில் இஸ்லாம் கிறிஸ்தவத்தை சகித்துக் கொண்டது என்றாலும் பின்னர் தீவிரமாக ஒடுக்க முற்பட்டு அது இந்நாளிலும் தொடர்கிறது.

குறிப்பு: பல ஆசிய மக்களுக்கும் தேசங்களுக்கும் நெஸ்டோரிய கிறிஸ்தவர்கள் வல்லமையான ஊழியர்களாக மாறினர். இதற்கு காரணம் அவர்கள் பின்வருவனவற்றை செய்ததே:

- பல ஊழியர்கள் சுயமாகத் தங்களைத் தாங்கிக் கொண்ட வியாபாரிகளும் வணிகர்களுமாகும்.
- தரிசனங்களைத் தந்து, அவிசுவாசிகளை நம்பச் செய்யும் அற்புதங்களை விளைவிக்க அவர்கள் தேவனையே சார்ந்து இருந்தனர்.
- அவர்கள் பல இடங்களில் கல்வி மற்றும் மருத்துவ நிறுவனங்களை ஏற்படுத்தினர்.
- அவர்கள் அபாயகரமான இடங்களில் மடங்களை நிறுவினர்.
- அவர்கள் மேய்ப்பர்களுக்கும் மந்தைக்கும் பயிற்சி அளித்து தொலைநோக்கான பார்வையை உருவாக்கினர்.

ஆயினும், பெரும்பாலான அவர்களது பணிகள் பின்னர் இவைகளால் அழிந்தன.

- அவர்கள் வேதாகமத்தை அந்தந்த பிரதேச மொழிகளில் மொழி பெயர்க்கவில்லை.
- பிரதேச சபைகளை அப்பகுதி மக்கள் வழிநடத்த அனுமதிக்கவில்லை.
- பிரதேச கிறிஸ்தவர்கள் தங்கள் கலாச்சார வடிவங்களைக் கொண்டு ஆராதிக்க அனுமதிக்கவில்லை.
- பலரும் மனமாற்றம் அடையாத, சொத்துக்கும் அதிகாரத்துக்காகவும் வாழ்ந்த பேரளவிலான சபை உறுப்பினர்கள்.

## கிறிஸ்தவம்: 1200 முதல் 1600 வரை

ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் உள்ள கிறிஸ்தவத் தலைவர்கள் வேதாகமத்தை மொழிபெயர்க்கவும், பொதுமக்கள் அதைப் படித்து அதற்குக் கீழ்ப்படியவும் தடையாய் நின்றனர். இது கிறிஸ்தவத்திற்கு பல மோசமான விளைவுகளை ஏற்படுத்தியது.

- இராஜாக்களும் போப்புகளும் அரசியலை மதத்துடன் கலந்து தங்கள் சொத்துக்களையும் அதிகாரத்தையும் அதிகரித்தனர்.
- 1095 ற்கும் 1350 ற்கும் இடையில் ஐரோப்பியர்கள் முஸ்லீம்களுக்கும், யூதர்களுக்கும், ஆசியக்கிறிஸ்தவர்களுக்கும் எதிராக சிலுவைப் போர்களை நடத்தி பலரைக் கொன்று அவர்கள் நிலங்களைக் கைப்பற்றினர்.
- போரில் தோல்வியுற்ற பெரும்பான்மையான மத்திய ஆசியா இஸ்லாமைத் தழுவியது.
- கி.பி. 1368 லிருந்து சீனாவில் மிங் அரசபரம்ரை நெஸ்டோரிய கிறிஸ்தவத்தை அழித்தொழித்தது.

- முஸ்லீம் பேரரசனான தாமர்லேன் (1336 -1405) ஆசியாவில் பெரும்பான்மை கிறிஸ்தவத்தை இல்லாதொழித்தான்.
- பிரான்சிசன் மற்றும் டொமினிக்கன் கிறிஸ்தவர்கள் முஸ்லீம்கள் மத்தியில் அமைதியான வகையில் ஊழியங்களை செய்து வந்தனர்.

## 2. வரும் வாரத்துக்கான நடவடிக்கைகளை உடன் ஊழியருடன் திட்டமிடவும்.

பகுதி 1 ஐ வாசித்து கிறிஸ்தவர்கள் செய்ய வேண்டிய விஷயங்களை கவனிக்கவும். உங்கள் சமுதாயத்தில் நீங்களும் விசுவாசிகளும் சேர்ந்து அதே விஷயங்களைச் செய்ய திட்டமிடவும்.

புதிய மேய்ப்பர்களை (உங்களால் பயிற்று விக்கப்படுகிறவர்கள்) சந்தித்து இப்பாடத்தில் இருந்து சபை வரலாற்றை போதிக்கவும். அல்லது அவர்களுக்குத் தேவைப் படும் வேறு பொருள் குறித்து போதிக்கவும். PTLT பயன்படுத்துவோர் பட்டியலை உபயோகியுங்கள்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் ஆலோசிக்கவும்.

இயேசுவைப் பற்றிய நற்செய்திளை அப்போஸ்தலர்கள் எவ்வாறு பரப்பினர் என்பதைக் கூறும் பகுதி 1ல் உள்ள வசனங்களை விசுவாசிகள் வாசிக்குமாறு செய்யுங்கள்.

நடுவில் உள்ள 400 ஆண்டுகளில் (கி.பி. 1200-1600) விசுவாசிகள் நற்செய்தியை எவ்வாறு பகிர்ந்து கொண்டனர் என்பதை விளக்குக.


பாடுகள் மற்றும் புறக்கணிப்புகளில் மத்தியில் எவ்வாறு தேவன் தமக்கு உண்மையாய் இருக்க உதவி செய்தார் என்பது குறித்து விசுவாசிகள் **சாட்சி** சொல்லட்டும்.

**பிள்ளைகள்** தாங்கள் தயாரித்த நாடகத்தை வழங்கட்டும்.

வெளி.20:4 ஐ வாசித்து, இயேசு ஒரு தியாகசீலர் என்பதையும் அவருக்காக மரிப்பவர்கள் யாவரும் அவருடன் ஆட்சி செய்வார்கள் என்பதையும் சுருக்கமாக விளக்கி **கர்த்தின் பந்தியை** ஆயத்தம் செய்க.

சேர்ந்து **மனப்பாடம்** செய்ய வேண்டியது மத்.10:32.

திட்டமிடவும், ஜெபிக்கவும், ஒருவருக்கொருவர் ஊக்கப்படுத்தவும் இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய **குழுக்களாக** அமரவும்.




ஆக்கிரமிப்பாளர்களான வைக்கிங்குகள் பெரும்பான்மை கிறிஸ்தவத்தை அழித்தனர். ஆயினும் பல வைக்கிங்குகள் பின்னர் கிறிஸ்தவர்கள் ஆயினர்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net